# நானிலம் போற்றும் நல்லி குப்புசாமி அவர்களிடம் 10 கேள்விகள்



பட்டுச்சேலை என்றால் நல்லி என்று உலகெங்கும் உள்ள தென்னிந்தியர்களுக்கு நினைவு வரும்வண்ணம் மாபெரும் பட்டு ஜவுளிப் பேரரசை வெற்றிகரமாக நடத்திவருபவர் பத்மஸ்ரீ, கலைமாமணி, டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள். இந்தியாவில் பலவிடங்களிலும், உலகின் சில நாடுகளிலும் 25க்கும் மேற்பட்ட கிளைகளை நிறுவி, ஆண்டுக்கு ரூ 550 கோடிக்கு மேல் வணிகம் நடத்திவரும் நல்லி அவர்கள் வெறும் வணிகர் மட்டுமன்றி, எழுத்து, இசை, கல்வி, தமிழ் வளர்ச்சி முதலிய துறைகளிலும் பெரும்பங்காற்றி வருகிறார்.

ஸ்ரீகிருஷ்ண கான சபா, பார்த்தசாரதிசாமி சபா, பிரும்ம கான சபா, ஸ்ரீபைரவி கான சபா, முத்ரா, மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ், சென்னை கல்சுரல் அகாடமி ஆகிய கலை அமைப்புகளின் தலைவராகவும், மதராஸ் பிலிம் சொசைட்டி, மைலாப்பூர் அகாடமி ஆகியவற்றின் துணைத்தலைவராகவும் உள்ளார்.

வணிகர் நலம்பேணும் அமைப்புகளான தமிழ் சேம்பர் ஆப் காமர்ஸ், ஆஸ்திரேலியா சேம்பர், இந்தோ-ஜப்பான் சேம்பர் இவற்றில் முக்கிய பங்காற்றி வருபவர். தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் திட்டக்குழு, கோவை பாரதியார் பல்கலைக்கழக செனட், இந்திய அரசின் பட்டு வாரியம், தெற்கு வட்டார கலைமையம் இவற்றின் உறுப்பினர். மதராஸ் புரோகரஸ் யூனியன் மேனிலைப்பள்ளியின் காப்பாளர். தற்கொலை தடுப்பு அமைப்பான ஸ்நேகாவின் தலைவர். திருப்பதி-திருமலை தேவஸ்தான அறக்கட்டளையின் முன்னாள் உறுப்பினர்.

அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக்கழக வட்டமேசை இவருக்கு மனிதவள மேலாண்மையில் கலாசார டாக்டர் பட்டம் வழங்கி சிறப்பித்துள்ளது(1987). தமிழக அரசிடமிருந்து கலைமாமணி விருதும் (2000) இந்திய அரசிடமிருந்து பத்மஸ்ரீ விருதும் வழங்கி இவர் சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

இத்துணைச் சிறப்புகளுக்கு அப்பால் இவர் ஒரு மிகச்சிறந்த மனிதர் என்று பலரால் மனதார வாழ்த்தப்படும் சிறப்பே தலையாயதாகும்.

பனகல் பூங்கா எதிரே உள்ள நல்லியின் மாபெரும் கடையில் தமக்கென அவர் அமைத்த சிறிய எளிய அறையில் நல்லி குப்புசாமி அவர்களுடன் இரண்டு காலை நேரங்களில் நிகழ்ந்த நேர்காணல் மிகச் சுவையானதும் விரிவானதுமாகும். எனினும் இடக்கட்டுப்பாடு கருதி இதனை இங்கு சுருக்கி வழங்குகிறோம்.

**? சென்னை தி.நகரில் 200 சதுர அடியில் தொடங்கிய நல்லியை 30,000 சதுர அடிக்கு விரிவாக்கி, இந்தியாவிலும், உலக நாடுகளிலும் கிளைகள் உருவாக்கி, இமாலய வளர்ச்சி பெற்றுள்ளீர்கள். இந்த வெற்றியின் இரகசியத்தைப் பகிரமுடியுமா?**

? ஒரு நீண்ட கதையை சுருக்கமாகச் சொல்ல வேண்டும். என் தாத்தா நல்லி சின்னசாமி செட்டி அவர்கள் காஞ்சிபுரத்தில் ஒரே தறியில் நெய்து வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப புடைவைகளைத் தரமாக வழங்கி வந்தவர். படிப்படியாக வளர்ந்து பல தறிகளுக்கு உரிமையாளராகி, மொத்த வணிகராக வளர்ந்து உற்பத்தியிலும், தரத்திலும் தீவிர கவனம் செலுத்தியவர். இந்தியத் தலைநகர் கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாறிய 1911-இல் 5-ஆம் ஜார்ஜ் மன்னர் இந்தியாவிற்கு வருகை தந்தபோது அவருக்கு இந்திய பாரம்பரியதைப் பிரதிபலிக்கும் பொருள்களைப் பரிசளித்ததில் காஞ்சிப்பட்டும் ஒன்றாக இருந்தது. காஞ்சியில் சிறந்த பட்டு என்றால் நல்லி சின்னசாமியை அணுகுங்கள் என்று கூறக் கேட்டு தாத்தாவிடம் ஆர்டர் தந்தனர். ஜார்ஜ் மன்னருக்கு நல்லி சின்னசாமி அவர்கள் காரனேஷன் பார்டர் போட்ட பட்டினை வழங்கிய பின் அவரிடம் பலர் பட்டுச்சேலைகள் வாங்க முன் வந்தனர். சென்னை மயிலாப்பூரிலிருந்து நிறைய ஆர்டர்கள் குவிந்தன. எனவே தியாகராய நகரில் மாங்கேஷ் தெருவில் திருமணப் பொருள்கள் விற்கும் கடைத் தொகுதியில் ஒரு கடையில் வணிகம் தொடங்கி, பின் 1926 ஜனவரி 26 அன்று பனகல் பார்க் எதிரே புதிய கடை தொடங்கினார் தாத்தா. அவருக்குப் பிறகு என் தந்தை நாராயணசாமி கடையின் பொறுப்பேற்றார். 2-ஆம் உலகப்போர் தொடங்கியபோது பாதி நகரமே காலியாகி, வியாபாரிகள் பலரும் சென்னை நகரை காலி செய்தபோதும், கடையை மூடாமல் தொடர்ந்தது பலரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானது நல்லி கடை.

13 வயதில் தந்தையைப் பறிகொடுத்த நிலையில். பள்ளிப்படிப்பை முடித்தகையோடு 1956இல், என் 16 வயதில் கடைக்கு வந்து என் சித்தப்பாவிடமிருந்து 1961 வரை ஜவுளித் தொழில் தொடர்பான சகல நுணுக்கங்களையும் கற்றுக்கொண்டேன். நெசவாளரான என் தாத்தா தலையில் தூக்கிச்சுமந்து வணிகம் செய்தார். என் தந்தை சைக்கிளில் சென்று தொழில் செய்தார். இன்று என் காலம் கார் காலம். வான் கப்பல் காலம்.

நான் பொறுப்பேற்ற 20 ஆண்டுகளில் வணிகம் 14 கோடியாக உயர்ந்தது. இன்று பல கோடியாகப் பெருகியுள்ளதற்குக் காரணம் என் முன்னோடிகளாக



நல்லி குப்புசாமி அவர்களுக்கு மயில் ஆசிரியர், திருக்குறள் மும்மொழி பொருளுரை நூல் வழங்குகிறார்.

இருந்த பெரியவர்கள் எடுத்துக்கொண்ட முனைப்பு, தொழிலில் காட்டிய அக்கறை, பொருளின் தரம் குறையாமலிருப்பதில் காட்டிய ஆர்வம், நேர்மை, நாணயம், நம்பிக்கை ஆகியவை மட்டுமே. பட்டு என்றாலே நல்லிதான் என்ற நிலையை உருவாக்கியுள்ளது. முன்னாள் குடியரசுத் தலைவர் இராஜேந்திரப் பிரசாத், எங்கள் கடைக்குவந்து துணிகள் வாங்கினார். அவர் தந்த காசோலை நகல் இன்னும் கடையில் வைக்கப்பட்டுள்ளது. ஈரான் மன்னர் ஷா, கிரேக்க இளவரசி, நேபாள மன்னர், நாகபுரி அரச குடும்பத்தினர், ஸ்ரீலங்காவின் திருமதி பண்டாரநாயக முதலியோர் எங்கள் கடைக்கு வருகை தந்துள்ளனர். எனினும் ஒருமாத ஊதியத்தின் முழுத்தொகையில் பட்டுசேலை வாங்க முன்வரும் சாதாரண வாடிக்கையாளரையும் எங்கள் சிறப்பிற்குரியவராகவே கருதுகிறோம்.

**? பட்டு என்றால் நல்லி என்று சொல்லுமளவு பெயர்பெற்ற உங்கள் பட்டு சேலைகளின் தரம், தயாரிக்கும் விதம், இதன் சிறப்பம்சங்கள் பற்றிக் கூறுங்களேன்.**

? பட்டுப்புடைவைகள் ரூ12க்கும், ரூ18க்கும் விற்கப்பட்ட காலத்தில் கூட என் தாத்தா வியாபாரத்தை உறவினர்களிடம் விட்டு விட்டு உற்பத்தியிலும் தரத்திலும் கவனம் செலுத்தினார். தரமே எங்கள் தாரக மந்திரம். தரம், புதுமையைப் புகுத்துதல், உரிய நேரத்தில் வழங்கல்,



இ.ஜே.சுந்தர் நேர்காணல் செய்கிறார்.

சத்தியம், நேர்மை இதுவே நல்லியின் குறிக்கோள். தாவரங்களிலிருந்து எடுக்கப்படும் அவுரி சாயத்தை எல்லா நெசவாளர்களும் பயன்படுத்தி வந்த காலத்தில், சுவிட்சர்லாந்தின் சிபா என்ற நிறுவனம் வேதியல் சாயத்தை அறிமுகப்படுத்தி இந்தியாவிலும் இதனைப் பரிசோதித்துப் பார்க்க நல்லியைத்தான் முதலில் நாடியது. நாங்கள் எங்கள் நெசவாளர்களுக்கு வேதியல் சாயம் எனக் குறிப்பிடாமல் கொடுத்துச் சாயமேற்ற வைத்ததில் எந்த வேறுபாடும் இன்றிப் பயனளித்து, வேதியல் சாயம் எங்கள் வழி வெற்றிபெற்றது. எங்கள் தாத்தா ஜார்ஜ் மன்னருக்கு வழங்கிய காரனேஷன் பார்டர் பட்டு புகழ்பெற்றதால், 1947-இல் அதைப் பின்பற்றி நேஷனல் பார்டர் என்று தேசியக்கொடி வண்ணத்தைச் சேலையில் பயன்படுத்தி வெற்றி பெற்றோம். பின் தியாகபூமி படம் பேசப்பட்ட காலத்தில் தியாகபூமி சேலையும், பின் பாலும் பழமும் படம் வந்தபோது, கட்டம் போட்ட புடைவைக்குப் பாலும் பழமும் என்று பெயரிட்டும், புட்டா போட்டா ரகத்திற்குத் தேன்நிலவு என்று பெயர் சூட்டியும், அண்மையில் ஒரு புடைவைக்கு டைட்டானிக், என்று கூட பெயரிட்டும் புதுமைகள் புகுத்தினோம். இப்போது என் இசை ஈடுபாடு காரணமாக ராகங்களின் பெயர்களை வைக்கிறோம். விவசாயிகளுக்கு நல்ல விளைநிலம் போலப் பட்டுத்தொழிலுக்குச் சிறந்த, மிகுதியான தறிகள் தேவை. எங்கள் சொந்தத்தறிகள் காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம் முதலிய இடங்களில் உள்ளன. மேலும் தேவைக்கு ஏற்ப ஒப்பந்தத் தறிகளையும் அமர்த்துகிறோம். பொங்கல், தீபாவளி, நவராத்திரி முதலிய பண்டிகைகளுக்கு ஏற்பவும், திருமணம், நிச்சயதார்த்தம், வரவேற்பு முதலிய விழாக்களுக்கு ஏற்பவும் தனித்தனி மாதிரிகளில் வாடிக்கையாளர்களுக்குச் சேலைகள் நெய்து தருகிறோம். பொதுவாக டிசைன்கள் 30 ஆண்டுகளுக்கு ஒரு முறை முன்பு இருந்ததே திரும்பிவரும். மாறி, மாறி வந்தவையே மீண்டும் வரும். நல்ல வைரத்தையும் தங்கத்தையும் பரிசோதித்தறிய கருவிகள் உள்ளன. ஆனால் உண்மையான பட்டைக் கண்டுபிடிக்க கண்மட்டுமே கருவியாகும். எனவே நம்பிக்கையின் அடிப்படையில் பாரம்பரியமான நாணயமான கடையில் பட்டு வாங்குவதே பாதுகாப்பானதாகும். நாங்கள் வாடிக்கையாளர்களின் அந்த நம்பிக்கையைப் பெற்றுள்ளோம்.

**? புடைவை அணிவது குறைந்து வேறுவகை ஆடைகள் பெருகிவரும் சூழலை வணிக ரீதியாக எப்படி எதிர்கொள்கிறீர்கள்?**

? முன்பெல்லாம் 13 முதல் 19 வரை இளம்பெண்கள் பாவாடை தாவணி உடுத்திவந்தனர். இப்போது சுடிதார் போடுகின்றனர். பாதிப்பெண்கள் வேலைக்குப்போவதால் வசதிகருதி சுடிதார் போடுகின்றனர். ஆனால் புடைவையை நம் பெண்கள் கைவிட்டுவிடவில்லை. முக்கிய நிகழ்வுகளிலும், பண்டிகைகளிலும், திருவிழாக்களிலும் புடைவை அணிவதையே பாரம்பரிய உடையாகவும், கௌரவமாகவும் நினைக்கின்றனர். சுடிதார் போன்ற ஆடைகளில் வரவால் புடைவை விற்பனை ஒன்றும் குறையவில்லை. ஒரு நிகழ்ச்சி சொல்கிறேன்- டில்லியில் ஒரு பஞ்சாபிய பெண் தொலைக்காட்சியில் கல்பனா ஐயர் என்ற தமிழ்ப்பெண் அழகாகப் புடைவை அணிந்து செய்தி வாசிப்பதைப் பார்த்துவிட்டு தானும் புடைவை அணிய ஆசைப்பட்டு, எதிர்வீட்டில் இருந்த தென்னிந்தியப் பெண்ணிடம் கல்பானா ஐயர் உடுத்தியதுபோலப் புடைவை வாங்கித்தர முடியுமா எனக்கேட்க அவர் டில்லியில் உள்ள நல்லிக்கடைக்கு அழைத்துச் சென்று அவர் கேட்ட வண்ணம் வாங்கிக் கொடுத்திருக்கிறார். அதுமுதல் அவர் புடைவையை மட்டுமே அணியத் தொடங்கினார். புடைவை உடுத்தும்போது தாம் பொலிவுடனும், நிறைவுடனும் இருப்பதாக உணர்கிறாராம். இப்படிப் புடவைக்கு மாறிய பலரும் உண்டு.

**? முதலாளி தொழிலாளி நல்லுறவைப் பேணியமைக்கு ரோட்டரியின் விருது பெற்றுள்ளீர்கள்! இந்த நல்லுறவை மற்ற நிறுவனங்களும் பின்பற்ற உங்கள் அறிவுரை என்ன?**

? ஊழியர்கள் நால்வருடன் நாங்கள் கடையைத் தொடங்கினோம். இன்று நான் அமர்ந்துள்ள தி.நகர் கடையில் மட்டும் 300 பேரும், பிற கிளைகள் எல்லாம் சேர்ந்து 4000 ஊழியர்களும் உள்ளனர். பட்டுரகங்களைத் தேர்ந்தெடுப்பதுபோலவே கவனத்துடன் பணியாளர்களையும் தேர்ந்தெடுக்கிறோம். நிதி நிர்வாகம் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது ஊழியர் நிர்வாகம். சாதுர்யமும், பேச்சுத்திறமையும், வாடிக்கையாளர்களை நன்கு உபசரிக்கிற தன்மையும் கொண்டவர்களைத் தேடிப்பிடித்து வேலைக்கு அமர்த்துகிறோம். நெரிசல் நாள்களுக்குத் தேவையான பணியாட்களைச் சாதாரண நாள்களிலும் வைத்திருக்கிறோம். ஊழியர்களின் வீட்டுத் திருமணங்கள், குழந்தைகளின் கல்வி, தேவைப்படும் மருத்துவ உதவி இவற்றிற்கு உதவுவதுடன் ஆண்டுக்கு 5 மாதம் போனஸ் தருகிறோம். நல்லியில் 1937 இல் சேர்ந்தவர்கள் தொடர்ந்து பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இங்கே ஓய்வு பெறும் வயதெல்லாம் இல்லை. முடியும் வரை பணியாற்றலாம். என் தாத்தா காலத்தில் இளைஞராகப் பணியில் சேர்ந்த அருணாசலம் 68 ஆண்டுகள் பணியாற்றி அண்மையில் காலமானார். தவறு செய்தால் கண்டித்துத்திருத்துகிறோம். ஊழியர் உறவு, ஊழியர் நலம் எந்தத் தொழிலிலும் முக்கியமானது என்பதையும், நிறுவனத்தின் வெற்றிக்கு உயர் மட்டத்தில் உள்ள மேலாளர் முதல். கடையில் உள்ள கடைநிலை ஊழியர் வரை எல்ரின் உதவியையும் சிறப்பாகப் பெறும் வண்ணம் சூழலை அமைக்கவேண்டும் என்பதையும் உணர்ந்தால் எந்த நிறுவனமும் செழிக்கும்..

**? பாரம்பரிய வணிகக் குடும்பத்தில் பிறந்த உங்களுக்கு எப்படிக் கலைகளிலும், இலக்கியத்திலும், கல்வியிலும் நாட்டம் ஏற்பட்டது ?**

? நான் சென்னை - தி.நகர் இராமகிருஷ்ணா மிஷின் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி (இறுதிவகுப்பு) வரை படித்தவன். வகுப்பில் நான் எப்போதும் முதல் மூன்று ராங்குகளுக்குள் இருப்பேன். பள்ளிப்படிப்பை முடித்தபின் சட்டம் படித்து வழக்கறிஞராக வேண்டும் என்பது என் ஆசை. தந்தையின் அகால மரணத்தால் கல்லூரியில் சேர்ந்து உயர் கல்வி பெறும் வாய்ப்பை இழந்து கடையை ஏற்கவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானேன். நான் பள்ளியில் கற்ற அறநூல்கள் என்னை ஆட்கொண்டன., ஆசிரியர்கள் என்னை உருவாக்கினார்கள். காந்தியின் சத்தியசோதனையைப் படித்து உண்மையையும், நேர்மையையும் எக்காலத்திலும் கடைப்பிடிக்க உறுதி பூண்டேன். பள்ளியில் கையெழுத்துப் பத்திரிகை நடத்தியபோது அதை அருகேயுள்ள வியாசர் தெருவில் குடியிருந்த கல்கண்டு ஆசிரியர் தமிழ்வாணனிடம் காட்டி அவர் அளித்த பாராட்டால் உற்சாகம் பெற்று, என் எழுதும் ஆசை வளர்ந்தது. சிறுவனாக இருந்தபோது நான் எழுதிய கதையை வெளியிட என் தந்தை கண்ணன் பத்திரிகை அலுவலகத்திற்கே என்னை ஒருமுறை கூட்டிச் சென்றார். பள்ளிப்பருவத்தில் அம்புலிமாமா, கண்ணன், கல்கண்டு, கல்கி, ஆனந்த விகடன் இதழ்களை விடாமல் ஆர்வமுடன் படிப்பேன். இன்று நூல்கள் எழுதுவதும், நூல்களை வெளியிடுவதும், 20,000 நூல்களைக் கொண்ட வீட்டு நூலகம் அமைத்திருப்பதும், பத்திரிகைகளைப் பேணுவதும், இலக்கியக் கூட்டங்களுக்குச் செல்வதும் இந்தத் தாக்கத்தினாலேதான். நான் உயர்கல்வி கற்க முடியாமையால் உயர்கல்வி கற்போருக்கு உதவுகிறேன். கல்வியின்மேல் எனக்கிருக்கும் அக்கறை காரணமாகப் பல்கலைக்கழகப் பொறுப்புகளையும் ஏற்கிறேன். நான் சிறுவனாக என் கடையில் நின்றிருக்கும் போதெல்லாம் பக்கத்துச் சபாவிலிருந்து என் காதில் சங்கீதம் ரீங்காரமிடும். இதனால் பட்டிலிருந்து பாட்டுக்கும் ரசிகனானேன். இந்த ரசிகத்தன்மையே இன்று பல சபாக்களுக்கு என்னைத் தலைமையேற்க உட்புகுத்தியது.

**(பயன்மிக்கதும் சுவாரசியதுமான இந்நேர்காணல் அடுத்த இதழில் நிறைவுறும்.)**




மயில் இதழை ஆர்வமுடன் படிக்கிறார்...

# நானிலம் போற்றும் நல்லி குப்புசாமி அவர்களிடம் 10 கேள்விகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

? இவ்வளவு பெரிய வணிகப் பேரரசைக் கட்டிக் காப்பதுடன், பல சபாக்களுக்குத் தலைவராக இருப்பதும், பல்கலைக்கழகங்களில் ஆட்சிக்குழு உறுப்பினராகச் செயல்படுவதும், நூல்கள் எழுதுவதும், மேடையில் பேசுவதும்- இப்படிப் பலவற்றை அவதானி போல நிகழ்த்தும் உங்கள் நேர ஆளுமையைப் பற்றிச் சொல்லுங்களேன்..

? இயக்குநர் கே.பாலசந்தர் அவர்களே இந்தக்கேள்வியை என்னிடம் வியப்புடன் கேட்பார். எவ்வளவு நேரமானாலும் இரவுக்குள் என் வேலையை முடிக்காமலும்,மறுநாள் செய்யவேண்டிய வேலைகளைத் திட்டமிடாமலும் நான் கடையைவிட்டுச் செல்லமாட்டேன். நான் பணிசெய்யும் மேசை, காகிதக் குவியல்கள் இன்றி எப்போதும் சுத்தமாகவே இருக்கும்.அதை அதை அவ்வப்பொழுது முடித்துவிடுவது என் வழக்கம். பணிகள் அதிகமாகிவிட்டால், பட்டியலிட்டு, முக்கியமானவற்றிற்கு மட்டும் முன்னுரிமை அளித்துச் செயல்படுவேன். ஒருமுறை தவிர்க்கமுடியாதபடி ஒரேநாளில் ஏழு திருமணங்களில் கலந்துகொண்டிருக்கிறேன். நேரத்தைச் சரியாகத் திட்டமிட்டதால் இது சாத்தியமானது.காலந்தவறாமையை இயன்றவரை கடைப்பிடிப்பேன்.பள்ளியில் பயிற்றுவிக்கப்பட்டும், பலரின் வாழ்க்கைமுறையைப் பார்த்தும் இந்த நேர ஆளுமையைக் கற்றேன்.



? நீங்கள் செய்யும் பல்வேறு பணிகளில் உங்களுக்கு மிகவும் மனநிறைவு தருவது எது?

? எழுத்து, இசை முதலியன என் உள்ளத்திற்கு இயைந்ததாயினும் எனக்கு மனநிறைவு தருவது என் கடையில் அமர்ந்து பணியாற்றுவதே! என் தந்தை இறந்த பின் ஒரு பெண் வாடிக்கையாளர் என் கடைக்கு வந்தார்.ஏன் உங்கள் அப்பாவின் படத்தைக் கடையில் மாட்டியிருக்கிறீர்கள்? என்று என்னிடம் வியப்புடன் கேட்டார்.அவர் காலமாகிவிட்ட செய்தியைச் சொன்னவுடன் அவரால் அழுகையை அடக்கமுடியவில்லை.அதன்பின் அவர் கடைக்கு வரவேயில்லை. அப்பாவினால் ஏற்பட்ட இழப்பை அதற்குப் பின்னால் பொறுப்பேற்றவரால் ஈடுகட்டவே முடியாது என்று அவர் நினைத்தது, அப்பாவின் மேல் அந்த வாடிக்கையாளர் வைத்த நம்பிக்கையை எனக்கு அழுத்தமாக உணர்த்தியது. இதனை ஈடுகட்டுவதே என் இலட்சியமாகக்கொண்டு உழைத்து வருகிறேன்.வாடிக்கையாளர்கள் முதலாளியைக் கடையில் எப்போதும் பார்ப்பதையே விரும்புகின்றனர். வாடிக்கையாளர்களை வாசல் வரை வந்து வழியனுப்பி, காரில் ஏற்றிவிடுவார் அப்பா.இன்றைய சூழலில் அதை என்னால் இப்போது செய்யமுடியவில்லை என்பது வருத்தமே.கடையில் இருந்து நான் பணியாற்றும்போது வேலைகளில் மூழ்கிப்போகிறேன்.ஒரு நாள் மதியம் ஒரு மணிக்குக் கடைக்கு வந்து என்னை மறந்து இரவு ஒரு மணிவரை நேரம் பார்க்காமல் அமர்ந்து பணியாற்றியிருக்கிறேன். பணியாட்கள், முதலாளி இன்னும் இருக்கிறார் நாம் எப்படி வீட்டுக்குப்போவது என்று தயங்கிக் கொண்டிருக்கிறார்கள் என என் மேலாளர் சொன்னபோதுதான் மணியைப்பார்த்துத் திடுக்கிட்டேன். மதியம் மாடியில் உள்ள என் வீட்டிற்குச்சென்று உண்டபின் சிறிது சாய்வு நாற்காலியில் படுத்து ஓய்வெடுப்பேன்.இந்த சாய்வு நாற்காலி என் தாத்தவின் நாற்காலி- எங்கள் குடும்பச் சொத்தைப் பிரிக்கும்போது நான் விரும்பிக் கேட்டு வாங்கியது.என் தாத்தா இந்த நாற்காலியில் அமர்ந்திருக்கும்போது என் அப்பா அவருக்குப் பின்னால் மரியாதையாக நின்றுகொண்டு சொல்லவேண்டியதை அடக்கமாகக் கூறுவார். சாய்வுநாற்காலியில் அமர்ந்திருக்கும்போது இவர்கள் இருவரின் நினைவும் அவர்கள் உருவாக்கிய நிறுவனத்தில் என் பொறுப்பும் நினைவுக்கு வரும். எனவே வணிகத்தை நடத்துவதையே என் தலையாய கடமையாகக் கருதுகிறேன்.

? மதிப்பீடுகள் எல்லாத் துறைகளிலும் சரிந்து வரும் நிலையில் அவற்றை மீட்டுருவாக்கம் செய்ய, சமூக அக்கறை உள்ள உங்களின் அறிவுரை என்ன?

? மதிப்பீடுகள் மதிப்பிழந்து வரும் அவலநிலை மிகவும் கவலைக்குரியதே.கல்விக்கூடங்களில் நீதிபோதனை வகுப்புகள் ஒழுங்காக நடந்தால் காவல் நிலையங்களே தேவையில்லை.அறநூல்களே இப்போது படிக்கப்படுவதில்லை.சமயச் சார்பற்ற அறநூல்களுக்குத் தமிழில் பஞ்சமில்லை.என்னை உருவாக்கியது வகுப்பறைதான்.நான் கேட்ட நீதிபோதனைகளே எனக்கு உயரிய மதிப்பீடுகளை வழங்கியுள்ளன.பணமே பிரதானம் என்ற எண்ணம் பெருகிவந்தால் மதிப்பீடுகள் மறைந்து போகும்..வகுப்பறைகளில் மாணவர்களுக்கு மதிப்பீடுகளைச் சரியாகப் பயிற்றுவிப்பதே அவற்றை மீட்பதற்கான வழியாகும்.

(நீதிநூல்களான இன்னா நாற்பது, இனியவை நாற்பது, முதுமொழிக்காஞ்சி ஆகிய 3 பழந்தமிழ் நீதி நூல்களின் சாரத்தை விளக்கி நாற்பதில் கவனம் என்ற நூலை நல்லி குப்புசாமி அவர்கள் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது)

? பல தமிழ் இதழ்களுக்கும், கலை, இலக்கிய அமைப்புகளுக்கும் புரவலரான நீங்கள் இவை அனைத்தும் இன்னும் ஆக்கப்பூர்வமாகச் செயல்பட என்ன அறிவுரை சொல்ல விரும்புகிறீர்கள் ?




வாழ்க்கை வரலாறு-6

? நான் புரவலராக உள்ளன அனைத்தும் ஆக்கப்பூர்வமாகவே செயல்பட்டு வருகின்றன. பத்திரிகைகளின் தரத்தைப் பார்த்தே நான் விளம்பரம் தருகிறேன்.. சிறு இதழ்களின் சிரமங்களை அறிவேன். நானே சரிகமபதநி என்ற பத்திரிகையைச் சில காலம் நடத்தி சிறுபத்திரிகையாளனின் சிரமங்களை அனுபவித்திருக்கிறேன்.என் கூட இதில் பங்கேற்றவர்கள் ஐ, ஆட்டோ செலவுக்குக்கூட தம் சொந்த காசைச் செலவழித்து இந்த இதழுக்காகப் பாடுபட்டும் இதழைத் தொடரமுடியவில்லை.பத்திரிகையைப் பொருளாதாரத் தடையின்றிப் பார்த்துக் கொள்வது அவசியம். விளம்பரங்களைப் போதிய அளவு பெற்றாலொழிய இதழ் நடத்துவது கடினம்.பத்திரிகை ஆசிரியர் இதழ் ஆக்கத்தில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டும். அதைவிட்டு அதன் பொருளாதார பிரச்சினைகளில் அவருடைய கவனம் சிதறினால் இதழ் தரம் கெடும்.

? மலேசிய தமிழர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் செய்தி யாது?

? மலேசியாவுக்கு நான் பலமுறை சென்றிருக்கிறேன்.என் கடைக்கும் நிறைய மலேசியத் தமிழர்கள் கல்யாண புடவை எடுக்க வருகிறார்கள்.புத்தகக்காட்சியிலும் நிறைய மலேசியத் தமிழர்களைக் கண்டது மகிழ்ச்சியாக இருந்தது. மலேசியாவின் உயரமான கட்டடத்தை ஒரு தமிழர் கட்டினார் எனக் கேள்வியுற்று பெருமையடைந்தேன். மலேசியாவில் பல இடங்களில் தமிழ் எழுத்துகளைப்

பார்க்கும் போது மனம் குதூகலித்தது.மயில் பத்திரிகையும், சுட்டி மயில் பத்திரிகையும் விளம்பரங்களேயின்றி இவ்வளவு ஆண்டுகள் நடத்தப்படும் அதிசயம் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறவேண்டிய ஒன்று. இத்தனை தரமான செய்திகளை, நேர்த்தியான தாளிலும், வடிவமைப்பிலும் பார்க்கும் போது வியப்பாக உள்ளது. இது போல ஓரிதழைத் தமிழ்நாட்டில் நடத்த முடியவில்லை. இவ்விரு இதழ்களையும் இங்கு யாரேனும் படித்தால் நாம் மலேசியாவில் பிறக்காமல் போய்விட்டோமே என்று ஏங்குவார்கள்.உமா பதிப்பகம் வெளியிட்டுள்ள தமிழ், மலாய், ஆங்கில திருக்குறள் பொருளுரை அற்புதமான முயற்சி.மிகத்தரமான தயாரிப்பு.சுவாமி சத்தியாநந்தா எழுதிய மலாயா சரித்திரமும் சிறப்பானது.தமிழ் வெளியீட்டுத்துறையில் உமா பதிப்பகம் சிறந்த சேவையாற்றிவருவது தொடரட்டும்.மலேசியத்தமிழர்களுக்குப் பெருமை சேர்ப்பன இந்த இதழும், வெளியீடுகளுமாகும்.

மயில் நேர்காணல் முடிந்தவுடன் அவர் எழுதியதும் அவரால் பதிப்பிக்கப்பட்டதுமான 53 நூல்களை அன்புடன் வழங்கினார். (அவர் வாழ்க்கை வரலாறு தொடர்பானவை-6, பாரதி பற்றியவை-10, ஆன்மீகம் தொடர்பானவை-5, வணிகம்,நிர்வாகம் தொடர்பானவை-12, வாழ்வியல் முன்னேற்றம்-9, பலதரப்பட்டவை- 11) எப்படி இத்தனை நூல்களை இடைவிடாப் பணிகளுக்கிடையே இவ்வளவு சிறப்பாக எழுதினார் என்று மலைக்கவைத்தன., நூல்கள் சில தமிழக அரசின் விருதுபெற்றவை. சில இந்திய மொழிகளிலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டவை. இன்னும் தொடர்ந்து படித்தும், எழுதியும், பயனான பணிகளைச்செய்தும், ஓயாமல் உழைக்கும் உற்சாகமான இந்த 75 வயது இளைஞர் தமிழ்ச் சமுதாயத்திற்கு பெரும் செல்வமாக, வழிகாட்டியாக, விளங்கி வருகிறார்.



# முரண்கள்

- கரு. சொக்கன்

கோயிலில் ஆன்மிக சொற்பொழிவு
சொற்பொழிவாளரின் முகமும் குரலும்
பக்தர்களின் மனத்தைக் கவர்ந்தன.
அவரின் உரையில் –
கோபத்தை அடக்கு கோபமே நாவின் சத்துரு
யாகாவாராயினும் நா காக்க
செயல்படுமுன் சிந்திக்க
போன்ற கருத்துகள்
வந்திருந்த அனைவரையும் கவர்ந்தன.
உரை முடிந்து அனைவரும்
வெளியேறிய பின்னர்
கோயில் தலைவருடன்
வெளியே வந்த சொற்பொழிவாளர்
ஆத்திரத்தில் கத்தினார்.
“எந்த மடையனோ என் காலணியை
மாற்றி எடுத்துப் போய்விட்டானே!”

